சார்பு நீதிமன்றம்,மன்னார்குடி

முன்னிலை: S.முத்துராமன், B.L.,

சார்பு நீதிபதி,மன்னார்குடி

2057 திருவள்ளுவராண்டு,, பராபவ வருடம் சித்திரை மாதம் 4 ம் தேதி

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் தேதி வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.152/2019**

**CNRNo.TNTV05000913-2019**

சரோஜா

அவருக்காக அவரது பொது அதிகாரம் பெற்ற

பவர் ஏஜண்ட் செங்குட்டுவன்

(இடைநிலை மனு எண்.2/2025, நாள் 03.04.2025-இல்

உள்ள உத்தரவின்படியான திருத்தம்) ......வாதி

//எதிர்//

1. நவரத்தினம்
2. கலாவதி
3. நாவேந்தன்
4. நம்பிராஜன்
5. பாலச்சந்திரன்
6. ஸ்டாலின்
7. மேனகா
8. ராஜபாண்டியன்
9. சண்முகபிரியன்
10. ஆனந்த்
11. சுசீலா
12. தமிழ்ச்செல்வி
13. தமிழ்வேந்தன்

14. சார்பதிவாளர்,

முத்துப்பேட்டை

15. மாவட்ட ஆட்சியர்,

திருவாரூர்

16. வட்டாட்சியர், மன்னார்குடி. ...பிரதிவாதிகள்

பிரதான அசல் வழக்கானது என் முன்பு கடந்த 12.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதிக்காக வழக்கறிஞர் திரு.K.S.கண்ணன் அவர்களும், 11 முதல் 13 பிரதிவாதிகளுக்காக வழக்கறிஞர் திரு.S.உதயகுமார் அவர்களும், 14 முதல் 16 பிரதிவாதிகளுக்காக அரசு வழக்கறிஞர் திரு.M.அன்புச்சோழன் அவர்களும் 1 முதல் 10 பிரதிவாதிகள் அழைக்கப்பட்டும் ஆஜரில்லை என ஒருதலைபட்சமாக்கப்பட்டும் இதுநாள் வரை என்னுடைய பரிசீலினையில் இருந்து வந்து சாட்சிகள், ஆவணங்கள் ஆகியவற்றை பார்வையிட்டு இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்...........

## தீர்ப்புரை

பிரதான அசல் வழக்கை வாதி பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்.

### 1.) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரை சுருக்கம் :-

தாவா சொத்தானது வாதி மற்றும் இறந்த யசோதாவின் தகப்பனாரும், 1 முதல் 6, 8 முதல் 10 மற்றும் 12, 13 பிரதிவாதிகளின் பாட்டனாரும் மற்றும் 7, 11 பிரதிவாதிகளின் மாமனாருமான இறந்த அய்யாவு அவர்கள் தன் சொந்த பணத்தை கொண்டு தனது மூத்த மகனான 7ம் பிரதிவாதியின் கணவரும் 8 முதல் 9 பிரதிவாதிகளின் தந்தையுமான வடிவேல் மைனராக இருந்தபோது அவர் பெயரில் கடந்த 1962ம் ஆண்டு கிரயம் பெறப்பட்டு அது முத்துப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகம் ஆவண எண்: 538/1962-ஆக

பதிவு செய்யப்பட்டு பெயரளவில் மட்டும் 7ம் பிரதிவாதியின் கணவரும் 8 முதல் 9 பிரதிவாதிகளின் தந்தையுமான வடிவேல் பெயரில் இருந்து வருகிறது. தாவா சொத்துக்கள் இறந்த அய்யாவு அவர்களால் சுயார்ஜிதமாக 7ம் பிரதிவாதியின் கணவரும் 8 முதல் 9 பிரதிவாதிகளின் தந்தையுமான வடிவேல் பெயரில் கிரயம் பெற்றுள்ள நிலையில் தாவா சொத்தை பெறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் அய்யாவு இறந்துவிட்டார். தாவா சொத்து இறந்த அய்யாவு வாரிசுகளான வாதி மற்றும் 1 முதல் 13 பிரதிவாதிகள் நாளது வரையில் பிரிவினையின்றி பொதுக்குடும்ப உறுப்பினர்களாக அனைவராலும் பொதுவில் அனுபவித்து வரப்படும் சொத்துக்கள் ஆகும். இறந்த யசோதாவிற்கு சட்டப்படி வாரிசுகள் கிடையாது. இறந்த அய்யாவுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் வாதி மற்றும் 1 முதல் 13 பிரதிவாதிகளுக்கு பிரிபடாத 1/5 பாகவீதம் சட்டப்படி சித்தித்துள்ளது. தாவா சொத்தை ஒரு இந்து பொதுக்குடும்ப மூத்த ஆண் உறுப்பினர் என்ற முறையில் 7ம் பிரதிவாதியின் கணவரும் 8 முதல் 10 பிரதிவாதிகளின் தந்தையுமான வடிவேல் இதர பாகஸ்தர்களுக்காகவும் நிர்வாகம் செய்து வந்தார். ஒரு பாகஸ்தருடைய அனுபோகம் இதர பாகஸ்தர்களையும் கட்டுப்படுத்தக் கூடியது என்பதால் தாவா சொத்தில் பொதுவில் பிரிபடாத பாகவீத அனுபோகம் வாதிக்கு சட்டப்படி சித்தித்துள்ளது. இந்நிலையில், தாவா சொத்துக்களை பொதுக்குடும்ப மேனேஜர் என்ற முறைமையில் நிர்வாகம் செய்து வந்த 7ம் பிரதிவாதியின் கணவரும் 8 முதல் 10 பிரதிவாதிகளின் தந்தையுமான வடிவேல் இடத்தில் குடும்ப சொத்துக்களை பிரிவினை செய்து கொடுக்கும்படி கேட்டு வந்ததற்கு பின்னர் தருகின்றேன் என்று கூறியதை நம்பி வாதி இருந்துவிட்டார். இப்பால், 7ம் பிரதிவாதியின் கணவரும் 8 முதல் 10 பிரதிவாதிகளின் தந்தையுமான வடிவேல் இறந்துவிட்டதால் தாவா சொத்துக்கள் தொடர்பாக மோசடியாக ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளதாக கேள்விப்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்திலும், வட்டாட்சியர் அலுவலகத்திலும் நகல் எடுத்து பார்த்தபோது தாவா

சொத்துக்களை பொருத்து 7 ம் பிரதிவாதியின் கணவரும் 8 முதல் 10 பிரதிவாதிகளின் தந்தையுமான வடிவேல் அவரது சகோதரர் 11ம் பிரதிவாதியின் கணவரும் 12 முதல் 13 பிரதிவாதிகளின் தந்தையுமான சுந்தர்ராஜன் பெயரில் ஒரு மோசடியான கிரய ஆவணம் எழுதி வைத்து மாற்றம் செய்துள்ளது தெரிந்து வாதி, 11 முதல் 13 பிரதிவாதிகளிடத்தில் கடந்த மார்ச் மாதம் முதல் வாரத்தில் கேட்டதற்கு "உனக்கு பாகவீதம் ஏதும் கொடுக்க முடியாது. உன்னால் ஆனதை பாரு". என்று வெளிப்படையாக தெரிவித்து விட்டார்.

அந்தப்படி தாவா சொத்துக்களில் வாதிக்கு உள்ள பாகவீதத்தை மறுக்க 11 முதல் 13 பிரதிவாதிகளுக்கு சட்டப்படி எவ்வித உரிமையும் இல்லை. 7ம் பிரதிவாதியின் கணவரும் 8 முதல் 10 பிரதிவாதிகளின் தந்தையுமான வடிவேல் அவர்களால் தாவா பொருத்து மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஆவணங்கள் ஏதும் தாவா சொத்தில் வாதிக்குள்ள" பிரிபடாத வீதத்தை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியதில்லை. இந்நிலையில் தாவா சொத்துக்களை பொருத்து மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களைக் கொண்டு 11 முதல் 13 பிரதிவாதிகள் மீண்டும் பராதீனங்கள் செய்து ஆவணங்கள் ஏற்படுத்த முயன்று வருகின்றனர். அந்தப்படி செய்ய சட்டப்படி அவர்களுக்கு உரிமையில்லை. எனவே, சொத்தில் வாதிக்குள்ள 1/5 பாகவீதத்தை பிரிவினை செய்துதர முதல்நிலை தீர்ப்பாணையும், அதனையனுசரித்து இறுதிநிலை தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வழக்கு நடவடிக்கை விபரங்கள் அரசு தரப்பிற்கு தெரிவிக்க வேண்டி 14 முதல் 16 பிரதிவாதிகள் இவ்வழக்கில் அவசிய தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். ஆனால், அவர்களைப் பொருத்து எவ்வித பரிகாரமும் இவ்வழக்கில் கோரப்படவில்லை. எனவே வாதிகள் கேட்டுக்கொண்டபடி தீர்ப்பு தீர்ப்பாணை வழங்க வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.) **<u>11ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 12ம் மற்றும் 13ம் பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம்</u>**:-

வாதியின் வழக்கு சரியல்ல, சட்டப்படி நிலைநிற்கத் தக்கதல்ல. முதல் எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது. வழக்கு விவரங்களை இந்த 11ம் பிரதிவாதி மறுதளிக்கிறார். இந்த வழக்கு சொத்து வாதியின் தகப்பனார் அய்யாவுக்கு சொந்தம் என்றும், அவரால் சம்பாதிக்கப்பட்ட வருமானத்தைக் கொண்டு அவரது மகன் மைனராக இருந்தபொழுது கிரயம் வாங்கப்பட்டது என்பது உண்மை. இந்த வழக்கு சொத்து பாகப்பிரிவினைக்கு உட்படுத்த வேண்டிய சொத்து அல்ல. வாதியின் தகப்பனாரும், இந்த 11ம் பிரதிவாதியின் மாமனாருமான அய்யாவு சுமார் 45 ஆண்டுகள் முன்பு காலமாகி விட்டார். அவரது மனைவி 1988ஆம் ஆண்டில் காலமாகிவிட்டார். காலஞ்சென்ற வாதியின் தகப்பனார் அய்யாவுக்கு மரகதம், யசோதா, பத்மாவதி, சரோஜா, வடிவேல், சுந்தர்ராஜன் ஆகியோர்கள் ஆண், பெண் வாரிசுகளாவார்கள். இதில் வாதியின் உடன்பிறந்த மூத்த சகோதரிக்கு 45 ஆண்டுகள் முன்பு திருமணமாகி அவர் கணவர் வீட்டுக்கு சென்று விட்டார். வாதியின் தகப்பனார் அய்யாவுக்கு பிறந்த பெண்கள் அனைருக்கும் பொதுக்குடும்ப வருமானத்திலிருந்து பொதுக்குடும்ப சொத்தாக மன்னார்குடி சீனிவாச அய்யங்காரிடம் கிரயம் பெற்று பொதுக்குடும்ப வருமானத்திலிருந்து பெருகவாழ்ந்தான் வட்டம், காந்தாரி கிராமம், அன்னதான கட்டளையைச் சேர்ந்த 8 மா நிலத்திலிருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டு இந்த 11ம் பிரதிவாதியின் கணவர் சுந்தர்ராஜன் ஆசிரியராக பணியாற்றி வருமானத்தில் சகோதரியின் திருமணம் உள்ளிட்ட சகல காரியங்களுக்கும் பொதுக்குடும்ப சொத்தாக இருந்த 8 மா நிலம் அசல் வழக்கின் 1முதல் 10 பிரதிவாதிகளின் தகப்பனார் வடிவேல் அவர்களால் பெருகவாழ்ந்தான் கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணசாமி குமாரர் கோபி என்பவருக்கு கிரயம் செய்து கொடுக்கப்பட்டது. அந்த தொகைகளை பொதுக்குடும்ப

திருமணம், பிரசவம், மாமன் முறைசீர் முறைகளுக்கு செலவிடப்பட்டது. இந்த விவரம் வாதிக்கு நன்கு தெரியும்.

மேலும், வாதியின் இளைய சகோதரி பத்மாவதி கணவரைப் பிரிந்து தன் சகோதரர்களுடன் நீண்டகாலம் தங்கியிருந்தார். அவருக்கான உணவு, உடை, உறையுள் குழந்தைகளுக்கான செலவு ஆகியவைகளை இந்த 11ம் பிரதிவாதியின் கணவர் சுந்தர்ராஜன் செலவழித்து வந்தார். இது வாதிக்கு நன்கு தெரியும். உண்மையிலேயே வாதியின் நோக்கம் பாகப்பிரிவினையாக இருக்குமேயானால் வாதியின் உடன்பிறந்த சகோதரர்கள் வடிவேல், சுந்தர்ராஜன் ஆகியோர்கள் கிருஷ்ணசாமி குமாரர் கோபிக்கு கிரயம் செய்து கொடுத்தபொழுதே ஆட்சேபித்திருக்க வேண்டும். அவ்வாறு ஆட்சேபிக்காததாலும், வாதியின் கட்சிப்படி பொதுக்குடும்ப பூரா சொத்துக்களையும் வழக்கில் சேர்க்காத காரணத்திற்காகவும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். மேலும் அவ்வாறு சொத்துக்களை கிரயம் பெற்ற கோபியை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு முழுமையாக தள்ளுபடி செய்யப்பட வேண்டும். வழக்கு சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள சொத்து இந்த வாதியின் உடன்பிறந்த சகோதரர் வடிவேலு அவர்களால் 1962 ஆம் ஆண்டில் சீனிவாச அய்யங்காரிடம் கிரயம் பெறப்பட்டு தனிப்பட்ட முறையில் ஆண்டு அனுபவித்து வந்து அதை இந்த 11ம் பிரதிவாதியின் கணவர் சுந்தர்ராஜன் 15.02.1996 ஆம் ஆண்டில் சரியான மறுபயனுக்கு கிரயம் பெற்று அதிலிருந்த கூரை வீட்டை அப்புறப்படுத்திவிட்டு ஒரு ஆர்.சி.சி. கான்கிரீட் வீடு 30 ஆண்டுகள் முன்பு அரசு ஊழியர் ஆசிரியர் கூட்டுறவு சங்கத்தில் வீட்டுக் கடன் பெற்று வீடு கட்டி வாழ்ந்து வந்து 2014 ஆம் ஆண்டில் காலமாகி விட்டார். அவ்வாறு கிரயம் பெற்ற சொத்தை பாகப்பிரிவினைக்கு உட்படுத்த வாதியால் கோரப்பட்டுள்ளது முற்றிலும் தவறானது.

பினாமி ஒழிப்புச் சட்டம் 1989 ஆம் ஆண்டில் அமலுக்கு வந்த பிற்பாடு குடும்ப தலைவர் அல்லது இரத்த பந்தம், பெயர் இரவலாக மனைவி, தாய், தந்தையர், மகன், மகள் ஆகியோர்கள் பெயரில் சொத்து வாங்கியிருந்தாலோ, அந்த சொத்து யார் பெயரில் பதிவு செய்திருந்தாலும் அது அவர்களுக்கு சொந்தமாகும். அந்த வகையில் இந்த 11ம் பிரதிவாதியின் கணவர் சுந்தர்ராஜனுக்கு விற்ற வடிவேல் மைனராக இருந்தபோதும் கிரயம் வாங்கியிருந்தாலும், அவர் மேஜரானவுடன் சொத்து அவருக்கு தனியாக சொந்தமாகும். அதில் பாகவீத உரிமை கோரவோ அல்லது பெயர் இரவலாக கிரயம் வாங்கப்பட்டதாகவோ கட்சியாட வாதி சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளார். வாதியின் உடன்பிறந்த இளைய சகோதரரான சுந்தர்ராஜன் 1996 ஆம் ஆண்டில் அவரது மூத்த சகோதரர் வடிவேலுவிடம் வழக்கு சொத்தை விற்ற விவரமும், அதில் பிற்பாடு கிரயம் பெற்ற சுந்தர்ராஜனால் மாடிவீடு கட்டப்பட்ட விவரமும் நன்கு தெரியும். 1996 ஆம் ஆண்டில் நடைபெற்ற கிரயத்தை உள்ளூரிலேயே வசித்து வரும் வாதி சரோஜா 23 ஆண்டுகள் கழித்து ஆட்சேபணை செய்ய அவருக்கு எந்தவித உரிமையும் கிடையாது. வாதியின் கோரிக்கை முற்றிலும் காலாவதியான கோரிக்கை ஆகும். வாதியின் வழக்கு காலவரையறை சட்டப்படி காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது. வாதிக்கு தெரிந்தே அவர் உரிமைகோரும் வடிவேல் பெயரில் உள்ள சொத்துக்கள் மூன்றாம் நபருக்கு கிரயம் செய்யப்பட்ட நிலையில் தனக்கு தேவையான விஷயங்களை மட்டும் கருத்தில் எடுத்து வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைநிற்கத் தக்கதல்ல. வழக்கு சொத்தில் சுமார் 30 ஆண்டுகள் முன்பு சுமார் 2000 சதுரடியில் கட்டப்பட்ட ரூ.50,00,000/- மதிப்புள்ள ஆர்.சி.சி. கான்கிரீட் வீடு உள்ளது.வாதி மிகவும் சாமர்த்தியமாக வீட்டை மறைத்து விட்டு தற்போது காலிமனையாக உள்ளதுபோல வழக்கிட்டுள்ளார்.

வழக்கு சொத்து கீழ்மனை, கட்டிடம், வீட்டின் மதிப்பு ரூ.70,00,000/-க்கு மேல் மதிப்புடையதால் வாதியின் வழக்கு நீதிமன்ற அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது.

ரூ.70,00,000/- மதிப்புள்ள சொத்தையும், வீட்டையும் மறைத்து ரூ.10,80,000/-ம் மதிப்பிட்டிருப்பது நிலைநிற்கத் தக்கதல்ல. இந்த 11ம் பிரதிவாதியின் கணவர் சுந்தர்ராஜன் காலமான பிற்பாடு அவரது வாரிசுகளான 11, 12, 13 பிரதிவாதிகளுக்குள் ஒரு பாகபாத்திய விடுதலை பத்திரம் இந்த வழக்கிற்கு முன்பே 01.01.2017ம் தேதியில் ஏற்பட்டு விட்டது. இந்த வழக்கு சொத்து முழுவதும் 11, 13 பிரதிவாதிகளாகிய சுசீலா, தமிழ்வேந்தன் ஆகியோர்களுக்கு முழுமையாக சொந்தமானதாகும். இந்த வழக்கு 12ம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு தேவையற்ற நபராவார். இந்த விவரம் வாதிக்கு நன்கு தெரிந்திருந்தும் சகோதரியின் கணவர் இறந்த சுந்தர்ராஜனின் மூன்று வாரிசுகள் மீது வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைநிற்கத் தக்கதல்ல. 11ம் பிரதிவாதியின் கணவர் வாதி மற்றும் உடன்பிறந்த சகோதரிகளுக்கு அவர்களது பாகவீதத்திற்கு மேலாகவே செய்துவிட்ட நிலையில் பொதுக்குடும்ப சொத்துக்கள் எதுவும் வாதியின் தகப்பனார் அய்யாவு விட்டுச் செல்லாத காரணத்தாலும் பிரிபடாத கூட்டுக்குடும்ப சொத்துக்கள் எதுவும் இந்த 11ம் பிரதிவாதியின் வசம் இல்லாத காரணத்தால் வாதி பாகப்பிரிவினை கோரியிருப்பது முற்றிலும் தவறானதாகும். வாதியின் மூத்த சகோதரர்களுள் ஒருவரான காலஞ்சென்ற வடிவேலுவுக்கு சொந்தமான தனிப்பட்ட சொத்துக்களை விற்பதற்கு அவருக்கு அதிகாரம் உண்டு. அதை கேள்வி கேட்கவோ, பாகம் கேட்கவோ வாதிக்கு உரிமை கிடையாது. எனவே தவறான தகவல்களின் அடிப்படையில் தாக்கல் செய்திருக்கும் சட்டப்பிழையான, காலாவதியான வாதியின் வழக்கை இந்த 11ம் பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3.) <u>14ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 15, 16 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம்</u>:-**

இந்த வழக்கில் வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்றவற்றை இந்த பிரதிவாதி மறுத்தளிக்கிறார். அவற்றை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். இவ்வழக்கின் வாதி, கோரியுள்ள பரிகாரம் எந்தவிதத்திலும் சரியானதல்ல. அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். மேற்படி பிரதிவாதியின் பெயரில் உள்ள சொத்துக்கள் அவருடைய அனுபவத்தில் உள்ளது. மேற்படி பட்டா மற்றும் ஆவணங்கள் ஏதும் வாதியின் பெயரில் இல்லை. வாதியானவர் பாகப்பிரிவினை கேட்க எந்தவிதத்திலும் முகாந்திரம் இல்லை. மேற்படி வாதி எந்த விதத்திலும் ஆவணங்கள் பதிவு செய்யக்கூடாது என கூறி உள்ளது. சட்டத்திற்கு புறம்பானதாகும். தாவா சொத்து பிரதிவாதியின் பெயரிலேயே பட்டாவும், சிட்டாவும் இருந்து வருகிறது. ஆகையால் வாதி கோரியுள்ள பரிகாரம் ஏற்புடையதல்ல. இந்த பிரதிவாதி முத்துப்பேட்டை சார்பதிவகத்தை பொறுத்தவரை சார்பதிவாளர் என்ற அலுவலக தகுதி அடிப்படையில் கிரய பத்திரங்கள் பதிவு செய்யப்பட முன்னிலையிடப்படும் போது, கிரயம் பத்திரம் எழுதிக் கொடுப்பவரின் பெயர், அந்த ஸ்தலத்திற்கு உரிமையாளர் என வருவாய்த்துறை ஆவணங்களில் அன்னாரது பெயர் உள்ளதா என்பதையும் எவ்வித உரிமை அடிப்படையில் கிரயம் கொடுக்கிறார் எனப்பார்த்து, அதனடிப்படையில் பதிவு செய்ய வேண்டியது சார்பதிவாளரின் கடமை ஆகும். இவ்வழக்கில் தாவா சொத்தில் இவ்வாதிக்கு எந்த அளவில் உரிமை உள்ளது என்பதைப் பொறுத்து, அனுமதித்தோ, மறுதளித்தோ மாண்புமிகு நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கும் பட்சத்தில் அந்த உத்தரவில் இந்த பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி இந்த பிரதிவாதி நடந்து கொள்ள தயாராக உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4.)** வாதியின் வழக்குரை பிரதிவாதிகளின் எதிர்வழக்குரைகள் இரண்டையும் பரிசீலித்து இந்த நீதிமன்றம் 11.06 2024 அன்று பின்வருமாறு எழுவினாக்கள் வனைந்துள்ளது.

1.Whether the Plaintiff is entitled to the relief of partition as prayed for ?

2.Whether it is true that the suit is bad for non-joinder of property (i.e) partial partition?

3. Whether it is true that the plaintiff has no right to claim for partition against the 1st defendant, because it was purchased by 1st defendant husband dt.15.02.1996?

4. Whether it is true that plaintiff rights were curtailed under the Benami Transaction Act ?

5. Whether the suit is barred by Limitation?

6.Whether the suit is hit for mis joinder of parties?

7.To what other relief is entitled by plaintiff?

**5.)** இந்த வழக்கில் வாதியின் பவர் ஏஜென்ட் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையான ஆவணங்களும், பிரதிவாதிகள் தரப்பில் இந்த 11 ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. அதன் பின்னிட்டு பி.வா.சா.1 குறுக்கு விசாரணைக்கு தன் உடல்நிலை சரியில்லை என்பதால் தன்னால் மேற்கொண்டு ஆஜராக முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டதால் 11 ம் பிரதிவாதியின் சாட்சியமான பி.வா.சா.1 ரத்து செய்யப்பட்டது. அதன் பின்னர் 13 ம் பிரதிவாதி பி.வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் ரத்து செய்யப்பட்ட நிலையில் அதே ஆவணங்கள் பி.வா.சா.2 முலமாக பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. 14 முதல் 16 வரையுள்ள பிரதிவாதிகள் தரப்பில் எந்த விதமான சாட்சிகளும் ஆவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

6.) வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையின் போது வழக்கு சொத்துக்கள் வடிவேல் பெயரில் அவர் மைனராக இருந்தபோது அய்யாவு அவரால் சம்பாதிக்கப்பட்ட வருமானத்தைக் கொண்டு கிரையம் வாங்கப்பட்டது என்றும், இந்த வாதி மேற்சொன்ன அய்யாவு என்பவரின் வாரிசு என்ற அடிப்படையில் அவருக்கு இந்த வழக்கு சொத்தில் சட்டப்படியான பாகம் உள்ளது என்றும், அந்த பாகம் பெறக்கூடிய அளவிற்கு தனக்கு வழக்கு மூலம் உள்ளது என்றும், வாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், ஆவணங்களை குறியீடு செய்துள்ளதாகவும் தெரிவித்து வழக்கில் கேட்டுள்ளவாறு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்க வேண்டும் என்று வாதுரை செய்தார். அதே சமயம் 11 முதல் 13 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான இந்த வழக்கு சொத்து வடிவேலுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றும், அவர் மைனராக இருந்தபோது அவர் பெயரில் வாங்கப்பட்ட சொத்து என்றும், பினாமி ஒழிப்புச் சட்டத்தின் கீழ் அமலுக்கு வந்த பிறகு சட்டத்தின் அடிப்படையில் வடிவேலு மட்டும் தான் சுய உரிமையாளர் என்றும், வாதிக்கு இந்த வழக்கில் எந்த விதமான பாக உரிமையும் கிடையாது என்றும், இந்த வாதியின் உடன் இருந்த சகோதரர் சுந்தரராஜன் 1996 ஆம் ஆண்டு மேற்சொன்ன வடிவேல் என்பவரிடம் வழக்கு சொத்தை விற்பனை செய்து உள்ளார் என்றும், வழக்கு காலவரம்பு சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் வடிவேல், சுந்தரராஜன் ஆகியோர்கள் கிருஷ்ணசாமி என்பவரின் குமாரர் கோபிக்கு சொத்தை கிரையம் செய்து கொடுத்த விபரமும் வாதிக்கு தெரியும் என்றும், வழக்கு சொத்து 70 லட்சத்திற்கு மேல் பெரும் என்றும், சமூக நீதிமன்றத்தில் அதற்கான ஆளுகை வரம்பு இல்லை என்றும், தற்போது 11 ம் பிரதிவாதி வசம் கைவசம் இல்லாத சொத்தைப் பொறுத்து அவசிய தரப்பினர்களை சேர்க்காமல் தேவையற்ற தரப்புகளை சேர்த்து தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 14 முதல் 16 வரையுள்ள பிரதிவாதிகள் இந்த வழக்கில்

அவசியமற்ற தரப்பினர்கள் என்றும் இருந்தபோதிலும் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புக்கு கட்டுப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**7.) <u>எழுவினா 5:-</u>**

இந்த எழுவினா- 5 அடிப்படையில் வாதி வழக்கானது காலவரம்பு சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டுள்ளதா? என்று தீர்வு காண வேண்டி உள்ளது.

இந்த வழக்கில் 11 முதல் 13 வரையுள்ள பிரதிவாதிகள் வாதியின் வழக்கு காலவரம்பு சட்டத்தினால் பாதிக்கப்பட்ட வழக்கு என்று கூறியுள்ளார். மேற்சொன்ன பிரதிவாதிகள் சுந்தர்ராஜன் என்பவரின் வாரிசுகள் என்று கூறியுள்ளார். வடிவேலு பெயருக்கு அவர் மைனராக இருந்த பொழுது கிரயம் பெறப்பட்டது என்று கூறியுள்ளார். அவ்வாறு கிரயம் பெற்ற சொத்தை வடிவேலு உரிமை வைத்து அடைந்த பின்ன 15.02.1996-இல் இந்த 11ம் பிரதிவாதி கணவர் சுந்தர்ராஜன் கிரையம் வாங்கியுள்ளார். இந்த அசல் வழக்கு 2019 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வாதியை குறுக்கு விசாரணை செய்கின்ற பொழுது வழக்கு சொத்து தன்னுடைய தாத்தா அய்யாவு வைத்திருந்ததாக சொல்லப்படும் நிலம் தன் மாமா வடிவேலுக்குரிய நிலம் என்றால் சரிதான் என்றும், வடிவேலு பெயரில் தான் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் இருந்தது என்றும், வடிவேலு உயிருடன் இருக்கும் பொழுது கோபி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றும், இரண்டு மாமாவும் சேர்ந்து கிரைய கொடுத்து விட்டதாகவும் கோபியை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான் என்றும், வடிவேலு, சுந்தர்ராஜன் பெயருக்கு எழுதிக் கொடுத்த ஆவண எண்.2 வழக்கின் விவரங்கள் தெரிய வந்ததால் தாக்கல் செய்ததாகவும், அது எழுதி கொடுக்கப்பட்ட ஆண்டு 1996 என்றால் சரிதான் என்றும் கூறியுள்ளார். இந்த வழக்கில் வாதியின் பவர் ஏஜென்ட் அவருடைய மகன் ஆவார். அவர்தான் இந்த வழக்கில் விசாரணை செய்துள்ளார். வாதி இந்த நீதிமன்றத்தில் சாட்சி

கூண்டேறவில்லை. வாதி சாட்சி 1 வாதியின் மகனாவார். அவரை பொறுத்தமட்டில் தன்னுடைய தாயாருக்கு 1962ம் ஆண்டு மேற்சொன்ன வடிவேலு மைனராக இருக்கும்பொழுது தன் தகப்பனாரின் சொந்த பணத்தை கொண்டு சொத்தை கிரயம் வாங்கியுள்ளார் என்று கூறியுள்ளார். .1962 ஆம் ஆண்டு பெறப்பட்ட ஒரு சொத்து அதன் பின்பு கிரயம் செய்து கொடுக்கப்பட்டு வழக்கு சொத்திற்கு தற்போது உரிமை இல்லாத வடிவேலு வாரிசுகளிடம் பாகப்பிரிவினை கேட்பது என்பது தவறானதாகும். பாகப்பிரிவினை வழக்காக இருந்தாலும் அத்தகைய சொத்தில் தனக்குரிய உரிமையை பொறுத்து 12 ஆண்டுகளுக்குள் கேட்கப்பட வேண்டும். அய்யாவு என்பவரின் சொந்த பணத்தை கொண்டு வடிவேலு மைனராக இருக்கும்போது அவர் பெயரில் கிரயம் வாங்கி இருப்பதாக வாதியே ஒப்புக்கொண்ட நிலையில் வடிவேலு தான் சொத்தின் முழு உரிமையாளர் என்ற அடிப்படையில் கிட்டதட்ட 50 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு காலவரம்பு சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**8.) <u>எழுவினாக்கள் 3 மற்றும் 4:-</u>**

இந்த எழுவினாக்கள் அடிப்படையில் வாதிக்கு வழக்கு சொத்தில் உரிமை இல்லை என்பது சரியா? என்பதும், பினாமி தடை சட்டத்தின் கீழ் வாதியின் உரிமை தடைசெய்யப்பட்டது என கூறியிருப்பது சரியா? என்று பார்க்க வேண்டியுள்ளது. பினாமி தடை சட்டம் (Benami Transactions Prohibition Act, 1988 / 2016)படி பார்க்கும்போது வடிவேலு மைனராக இருக்கும்போது அய்யாவு தன் பணத்தை கொண்டு வடிவேலு பெயரில் சொத்து வாங்கியுள்ளார். இது பினாமி பரிவர்த்தனை ஆகும். இச்சட்டத்தின் கீழ்: பினாமியாக வாங்கப்பட்ட சொத்தில் பணம் கொடுத்தவருக்கு (அய்யாவுக்கு) உரிமை கோரமுடியாது. வடிவேலுவே சட்டப்படி உரிமையாளர் ஆவார். எனவே வாதி (அய்யாவின் வாரிசு என்ற முறையில்) பங்கு கேட்க முடியாது என்பது பிரதிவாதிகளின் வாதமாகும்.

அய்யாவுக்கும், வடிவேலுவுக்கும் இடையே தகப்பன்-மகன் உறவு என்பதால் சட்டம் இதை பினாமியாக கருதாது (natural love and affection / legal obligation to maintain) தகப்பன் மைனர் மகன் பெயரில் சொத்து வாங்குவது பரிசு (Gift) ஆகவோ அல்லது சட்டபூர்வமான கடமை ஆகவோ கருதப்படும்.

இந்நிலையில் வடிவேலு மட்டுமே சட்டபூர்வ உரிமையாளர் ஆவார், தந்தை தன் சொந்த பணத்தால் மைனர் மகன் பெயரில் வாங்கிய சொத்தில் பாகப்பிரிவினை கோர முடியாது – ஏனெனில் அது மைனருக்கு வழங்கப்பட்ட பரிசாக சட்டம் கருதுகிறது. ஆனால் அது HUF சொத்து என நிரூபிக்கப்பட்டால் மட்டுமே பாகப்பிரிவினை வழக்கு எடுத்துக்கொள்ளப்படும். வாதியும், வழக்கு சொத்து இந்து கூட்டுக்குடும்ப சொத்து என்றோ அல்லது இந்து கூட்டுக்குடும்ப சொத்திலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்திலிருந்து வழக்கு சொத்து வாங்கியதாக தெரிவிக்காத நிலையில் வடிவேலு தான் 1962-ல் கிரையம் பெறப்பட்ட காலத்திலேயே உரிமையாளராக மாறிவிட்டதால் மேற்சொன்ன வடிவேலு அவருடைய உடன்பிறந்த சகோதரர் சுந்தராஜன் என்பவருக்கு 15.02.1966-ல் எழுதிக் கொடுத்த கிரைய பத்திரத்தை பொறுத்து கேள்வி எழுப்பும் உரிமை இல்லை என்றும், பினாமி தடை சட்டத்தின் கீழ் இரத்த சம்மந்தமான மகன், தந்தைக்கிடையே அத்தகைய சட்டம் பொருந்தாது என்ற அடிப்படையில் வாதியின் உரிமை அற்றுப்போய்விட்டதாகவே கருதப்பட்டு மேற்சொன்ன இரண்டு எழுவினாக்களும் வாதிக்கு எதிராக முடிவு செய்யப்படுகிறது.

9.) <u>எழுவினாக்கள் 2 மற்றும் 6:-</u>

இந்த வழக்கை பொருத்தமட்டில் இந்த வாதி குறிப்பிடும் அய்யாவுக்கு சொந்தமான பல சொத்துக்கள் இருப்பதாக வாதி கூறியுள்ளார். குடும்ப சொத்துக்களை கோபி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளன. வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்கின்றபோது வடிவேலு உயிருடன் இருக்கின்ற காலத்திலேயே

கோபி என்பவருக்கு சொத்து கிரையம் செய்து கொடுக்கப்பட்டது என்றும், அதை தன்னுடைய தாயாரான வாதி ஆட்சேபிக்கவில்லை என்றும் கூறியுள்ளார். அதேபோல இந்த 11 ம் பிரதிவாதி கணவர் பெயருக்கு வடிவேலு கிரயம் செய்து கொடுத்துவிட்ட பிறகு பி.வா.ஆ.3 மூலமாக இந்த வழக்கில் கண்ட 12 ம் பிரதிவாதி அவருக்குரிய பாகத்தை 11, 13 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்படுத்தி கொடுத்து விட்டார். அத்தகைய பாக விடுதலைக்கு பிறகு 12 ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை. ஆகவே ஒரு பாக பிரிவினை வழக்கில் அனைத்து சொத்துக்களும் சேர்க்கப்பட வேண்டும் என்ற பொதுவான விதியும் அந்த விதியின் அடிப்படையில் குடும்ப சொத்துக்களில் கிரயம் பெற்ற கோபி என்பவர் இந்த வழக்கத்திற்கு அவசியமான தரப்பினர் ஆவார். அதேபோல 12 ஆம் பிரதிவாதி அவருக்குரிய பாகத்தினை அவருடைய தாயாருக்கும் சகோதரர்களுக்கும் விடுதலை செய்து விட்டதால் அவர் இந்த வழக்கில் அவசியமற்ற தரப்பினர் ஆவார். அவசிய தரப்பினரை சேர்க்காத நிலையிலும், அவசியமற்ற தரப்பினரை சேர்த்த நிலையிலும் வாதியின் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று முடிவு செய்யப்பட்டு மேற்சொன்ன இரண்டு எழுவினாக்களும் வாதிக்கு எதிராக முடிவு செய்யப்படுகிறது.

**10.) <u>எழுவினா- 1:-</u>**

இந்த எழுவினா-1 அடிப்படையில் வாதிக்கு வழக்கு சொத்தில் அவர் கேட்டிருக்கும் பாகம் கிடைக்ககூடியதா? என்று பார்க்கும்போது தாவா சொத்தை பொறுத்தமட்டில் வாதிக்கோ, வாதியின் தகப்பனாருக்கோ, அல்லது அவர்களின் முன்னோர்களுக்கோ எந்த உரிமையும் இல்லாத நிலையில் வழக்கு சொத்து வடிவேலுக்கு சொந்தமான சொத்து என்று முடிவு செய்யப்பட்ட நிலையிலும், மேற்சொன்ன வடிவேலு சுந்தராஜன் என்பவருக்கு சொத்தை கிரயம் செய்து கொடுத்து அதன்பின்னர் அவரது வாரிசுகளுக்கிடையே ஏற்பட்ட பாகவிடுதலை ஆவணத்திற்கு பிறகு 11 மற்றும் 12 ம் பிரதிவாதிகளே வழக்கு சொத்தின் உரிமையாளர் என்றும் தெரிய வரும் நிலையில்

உரிமை கேட்க கூடாத சொத்தில் வாதிக்கு எந்த பாகமும் கிடைக்கக்கூடியது அல்ல என்று மேற்சொன்ன எழுவினா-1 வாதிக்கு எதிராக முடிவு செய்யப்படுகிறது.

**11.) <u>எழுவினா 7:-</u>**

வாதிக்கு கூடுதலாக ஏதேனும் பரிகாரம் வழங்க வேண்டியுள்ளதா? என்று பார்க்கின்றபோது ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட எழுவினாக்கள் அனைத்தும் வாதிக்கு எதிராக முடிவு செய்யப்பட்டபடியால் வாதிக்கு கூடுதலாக எந்த பரிகாரமும் வழங்க வேண்டிய அவசியம் இல்லையென்றும் முடிவு செய்யப்படுகிறது.

**12)** இறுதியாக,

1) வாதியின் வழக்கு முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

2) தரப்பினர்களின் உறவுமுறைகளை அனுசரித்து செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் தேதி என்னால் இத்திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUTHURAMAN Digitally signed by MUTHURAMAN Date: 2026.04.17 19:00:17 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.

**<u>பின் இணைப்பு</u>**

**1. <u>வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி</u>:-**

வா.சா.1. செங்குட்டுவன் (வாதி பவர் ஏஜெண்ட்)

**2. வாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 28.02.1962 | சீனிவாசன் வடிவேலுக்கு எழுதிக் கொடுத்த கிரய சாசனம் | பதிவு நகல் |
| வா.சா.ஆ 2 | 11.11.1969 | 1 ம் பிரதிவாதிக்கு வடிவேல் எழுதிக் கொடுத்த கிரய சாசனம் | பதிவுநகல் |
| வா.சா.ஆ 3 | 15.02.1996 | சுந்தரராஜன் அவர்களுக்கு வடிவேல் எழுதிக் கொடுத்த கிரயசாசனம் | பதிவு நகல் |
| வா.சா.ஆ.4 | ---- | Guideline value (கோர்வை) | இனையவழி நகல் |

**3. பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி:-**

பி.வா.சா.1. சுசீலா (11 ம் பிரதிவாதி ) eschewed on 22.09.2025)

பி.வா.சா.2. தமிழ்வேந்தன் (13 ம் பிரதிவாதி)

**4. பிரதிவாதிகள் தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 28.04.1962 | அண்ணாசாமி ஐய்யங்காருக்கு சீனிவாச ஐயங்கார் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட சுத்த கிரய சாசனம் | சார்பதிவு நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 15.02.1996 | சுந்தரராஜன் அவர்களுக்கு வடிவேலு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட சுத்த கிரய சாசனம் | சார்பதிவு நகல் |
| பி.வா.சா.ஆ 3 | 01.11.2017 | பாகவிடுதலை பத்திரம் | சான்றிட்டநகல் |

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.4 | 28.022019 | வழக்கு சொத்திற்கான வீட்டு வரி ரசீது கோர்வை (எண்ணம்3) | நகல் |
| பிவா.சா.ஆ.5 | 01.02.2024 | வழக்கு சொத்திருக்கான சொத்து வரி ரசீது | அசல் |
| பி.வா.சா.ஆ.6 | 2021_2022 | குடிநீர் கட்டண ரசீது | அசல் |
| பி.வா.சா.ஆ.7 | 22.08.2021 | வழக்கு சொத்துக்களை காட்டக்கூடிய புகைப்படங்கள் 3 சிடி 1ரசீது கோர்வை | அசல் |

MUTHURAMAN Digitally signed by MUTHURAMAN Date: 2026.04.17 19:00:44 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.